| அரையாண்டுத் தேர்வு - 2022 | தேர்வு எண் |
|---|---|
| காலம் : 3.00 மணி | XII - வரலாறு | மதிப்பெண் : 90 |

பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **(20×1=20)**
2) சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855
2. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்
அ) புலின் பிஹாரி தாஸ் ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ்
ஈ) குதிராம் போஷ் மற்றும் பிரஃபுல்லா சாக்கி
3. 'Indian Unrest' என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதிராய் ஆ) வேலண்டைன் சிரோல்
இ) திலகர் ஈ) அன்னிபெசண்ட்
4. காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே
5. முதலாவது பருத்தித் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1852 ஆ) 1854 இ) 1861 ஈ) 1965
6. இரு நாடு கொள்கையை முதன்முதலில் கொண்டு வந்தவர்
அ) இராஜாஜி ஆ) ராம்சே மெக்டொனால்டு
இ) முகமது இக்பால் ஈ) சர்வாசிர் ஹசன்
7. *பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க*
அ) இந்து-முஸ்லீம் கலவரம் - 1) மோகன் சிங்
ஆ) ஆகஸ்ட் கொடை - 2) கோவிந்த் பல்லப் பந்த்
இ) பிரிவினைத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் - 3) லின்லித்தோ பிரபு
ஈ) இந்திய தேசிய இராணுவம் - 4) நவகாளி

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 2 | 1 |
| ஆ) | 4 | 2 | 1 | 3 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 3 | 2 | 4 | 1 |

8. இந்திய தேசிய இராணுவம் எந்த நாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது?
அ) ஜெர்மனி ஆ) ஜப்பான் இ) பிரான்ஸ் ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
9. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா
10. பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்
அ) ராம் மனோகர் யோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர் லால் பகுகுணா
11. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டன
அ) 2005 ஆ) 2006 இ) 2007 ஈ) 2008
12. **கூற்று:** காகிதம் கி.மு.(பொ.ஆ.மு) இரண்டாம் நூற்றாண்டில் சீனாவில் தோன்றியது
**காரணம்:** நகரும் அமைப்பிலான அச்சு இயந்திரத்தை ஜெர்மனி கண்டுபிடித்தது
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு. காரணம் சரி
13. *கீழ்கண்டவற்றில் எது சரியாக பொருத்தப்படவில்லை?*
அ) மார்லோவ் - டிடோ
ஆ) ஷேக்ஸ்பியர் - கிங்லியர்
இ) பிரான்சிஸ் பேகன் - நோவும் ஆர்கனும்
ஈ) ரோஜர் பேக்கன் - டெக்கமரான்
14. வட அமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் ______
அ) போர்த்துகீசியர் ஆ) ஸ்பானியர் இ) டேனியர் ஈ) ஆங்கிலேயர்
15. பாஸ்டிக் சிறை தகர்ப்பு ______ இல் நடந்தது
அ) 1789, ஜுன் 5 ஆ) 1789, ஜூலை 14
இ) 1789, நவம்பர் 11 ஈ) 1789, மே 1
16. நெப்போலியன் முதன்முறை நாடுகடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்ட இடம் ______ ஆகும்
அ) எல்பா ஆ) செயின்ட் ஹெலனா இ) கார்சிகா ஈ) வாட்டர்லூ
17. "இரு உலகங்களின் நாயகன்" என கொண்டாடப் பட்டவர் ______ ஆவார்
அ) சார்லஸ் ஆல்பிரட் ஆ) பிஸ்மார்க்
இ) மூன்றாம் நெப்போலியன் ஈ) கரிபால்டி



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

18. பன்னாட்டு சங்கத்தின் முதல் பொது செயலாளரான எரிக் ட்ரம்மோண்ட் ——— நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்
அ) பிரான்ஸ் ஆ) தென்னாப்பிரிக்கா
இ) பிரிட்டன் ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

19. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் ——— ஆவார்
அ) யாமமோடோ ஆ) ஸ்கூஸ்னிக்
இ) இரண்டாம் கெய்சர் வில்லியம் ஈ) ஹிரோஷிமா

20. 1947ன் இறுதியில் கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கிலிருந்து விடுபட்டிருந்த ஒரே நாடு ———
அ) கிழக்கு ஜெர்மனி ஆ) செக்கோஸ்லோவாக்கியா
இ) கிரீஸ் ஈ) துருக்கி

## பகுதி - 2

*குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.*
*வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.* **(7x2=14)**

21. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி
22. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.
23. இந்தியப் பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?
24. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?
25. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.
26. கிறித்துவ சீர்திருத்த இயக்கத்துக்கு எராஸ்மஸ் எவ்வாறு வழியமைத்தார்?
27. இத்தாலியை மெட்டர்னிக் "வெறும் பூகோள வெளிப்பாடே" என ஏன் கூறினார்?
28. ஜெர்மனி பிரான்சை தனிமைப்படுத்த முனைந்ததேன்?
29. மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?
30. அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.

## பகுதி - 3

*குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.*
*வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.* **(7x3=21)**

31. மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை' ஆய்க.
32. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களைப் பற்றி விவரிக்கவும்.
33. சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?
34. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
35. குத்தகை சீர்திருத்தங்களின் நோக்கங்கள் யாவை?
36. அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.
37. பிரான்ஸ் தும்மினால் ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் - தெளிவுபடுத்துக.
38. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
39. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.
40. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக.

## பகுதி - 4

*குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* **(7x5=35)**

41. அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.
*(அல்லது)*
ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

42. அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.
*(அல்லது)*
ஆ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.

43. அ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும். *(அல்லது)*
ஆ) 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கண்டறிக.

44. அ) இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும். *(அல்லது)*
ஆ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள் அதன் போக்கு விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

45. அ) இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது. *(அல்லது)*
ஆ) முதல் உலகப்போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.

46. அ) சீனாவில் பொதுவுடைமை அரசு உருவாக மாசே-துங்கின் பங்களிப்பை விவரித்து எழுதுக. *(அல்லது)*
***ஆ) இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.*** 1) தண்டி 2) பூனா 3) சம்பரான் 4. மீரட் 5) தூத்துக்குடி

47. அ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும். *(அல்லது)*
ஆ) இரண்டாம் உலகப்போரின் போது நடைபெற்ற நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோடு வரைந்து காட்டுக.



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com